தையூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை - திரு.S.குமரவேல்

ந.க.எண்.17/2023-24/தலைவர் நாள்.13.03.2024

பொருள் : மனைப்பிரிவு - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - தையூர் ஊராட்சி – "அ" கிராமம், Mr.Ashok & Mrs.Kumuthavalli என்பவரின் சர்வே எண். 162/2A, 2B, 2C; 163 & 166/1A-ல் 0.37.78 Hector (3,778ச.மீ) மனைப்பரப்பில் அமையும் குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி (ம) திட்ட அனுமதி ம.வ/மா.உ.தி.கு.(செ.மா).எண். 49/2024 மனைப்பரப்பில் அமையும் உத்தேச குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை : 1.இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு, அவர்களின் கடித ந.க.எண். WR20ASW1/2023 மாஉதிகு (செ.மா-5), நாள். 11.03.2024.

2.தையூர் ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.214 நாள்04.03.2024.
3.பலவகை வரவு ரசீது எண்2143நாள்13 .03.2024
4.தொடர்புடைய ஆவணங்கள்.

****

உத்திரவு

பார்வை 1-ல் காணும் இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு, அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். WR20ASW1/2023 மாஉதிகு (செ.மா-5), நாள். 11.03.2024-ன் படி திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், தையூர் ஊராட்சி மற்றும் "அ" கிராமம், Mr.Ashok & Mrs.Kumuthavalli என்பவரின் சர்வே எண். 162/2A, 2B, 2C; 163 & 166/1A-ல் 0.37.78 Hector (3,778ச.மீ) மனைப்பரப்பில் அமையும் குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி (ம) திட்ட அனுமதி **ம.வ/மா.உ.தி.கு.(செ.மா).எண். 49/2024** என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, பரிசீலினை செய்து மேற்படி குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணம் ரூ. 1,000/- மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ. 1,30,280/-ஆக மொத்த கட்டணம் ரூ. 1,31,280/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து ஒன்ராமிரத்து இரநூற்று என்பது ரூபாய் மட்டும்) தையூர் ஊராட்சியில் செலுத்தியமைக்கான பலவகை வரவு ரசீது எண்.2143நாள். 13 .03.2024-ன் படி கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இக்குடிமிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. எனவே நில உரிமை சான்றுகள் தவறென கண்டறியப்பட்டால் இவ்வுத்தரவு இரத்தானதாக கருதப்படும்.

2) மேற்படி மனைப்பிரிவில் தானபத்திரம் மூலம் பெறப்பட்ட பகுதிகளில் சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் மற்றம் வடிகால் வசதிகள் மனுதாரரே சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.

3) எந்த ஒரு அடிப்படை வசதிக்கான கட்டமைப்பு பணி முடிவுற்ற பின்னர் இவ்வொன்றிய பொறியாளரிடம் அதற்கான தரச்சான்று பெற வேண்டும்.

4) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5) மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

6) இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாக ஏதேனும் தணிக்கைத்தடை ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகையை மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

தலைவர்
தையூர் ஊராட்சி
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

Mr.Ashok & Kumuthavalli,
No.41, RWD Palm House,
Kayathiri Nagar, Medavakkam,
Chennai – 600100.

Scanned with OKEN Scanner